அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS













# தமிழ் ஆண்டு 7

# செப்பனிடப்பட்ட வரலாற்றுப் பாடங்கள்









# தமிழ்

## ஆண்டு 7

## TAMIL YEAR 7



அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# 7 ஈழத்தமிழர் வரலாறு

## கலந்துரையாடுவோம்:

தமிழர்கள் தொன்றுதொட்டு ஈழம் முழுவதும் பரந்து வாழ்ந்துள்ளார்கள். ஈழத்தின் நுண்கற்கால பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய தொன்மைக் குடிகளாகிய இயக்கரும் நாகரும் தமிழர்களின் மூதாதையினர் என்பதனையும் அவர்கள் தனித்துவமான மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றுடன் வாழ்ந்துள்ளமையையும் சான்றுகள் உறுதி செய்கின்றன.

ஈழத்தில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடு என்பது அரச ஆட்சிமுறையின் உருவாக்கத்திற்கான காலமெனக் கூறப்படுகிறது. இப்பண்பாட்டுடன் அறிமுகப்படுத்தப்பட்ட ஈமச் சின்னங்கள், நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்கள் என்பன அரச ஆட்சி தோன்றுவதற்கான முதன்மைக் காரணங்கள் எனலாம். இவற்றை உருவாக்குவதற்கு மக்களின் வலு தேவைப்பட்டது. இதனால், தலைவர்கள் உருவாகிப் பெருங்கற்கால மக்களை ஒருங்கிணைத்தனர். இத்தலைவர்களே அரசர்களாகச் சிறிய நிலப்பரப்புகளில் ஆட்சி செய்யத் தொடங்கினர். காலப்போக்கில் இத்தலைவர்களிடையே ஆள்புலப் போட்டிகள் ஏற்பட்டன. பரந்த நிலப்பரப்புகள் வலுவான அரசர்களின் மேலாண்மைக்கு உட்பட்டன. இதனால், வலுவான அரசுகள் உருவாகின.

பெருங்கற்கால மக்கள் வரிவடிவங்களைக் கண்டுபிடிக்கும் முன்னர், தொடர்பு மொழியாகக் குறியீடுகளைப் பயன்படுத்தினர். அவற்றைப் பயன்பாட்டுப் பொருள்களில் பொறித்தனர். இக்குறியீடுகள் பிற்காலத்தில் தமிழர்கள் வெளியிட்ட நாணயங்கள், கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.



பூநகரியில் கிடைக்கப்பெற்ற சங்ககால நாணயங்கள்



தென்னிலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள்

குறியீடுகளைத் தொடர்ந்து தமிழி (தமிழ்ப்பிராமி) எழுத்தினைக் கண்டறிந்த பெருங்கற்கால மக்கள் தமது பெயர்களைப் பானையிலும், சுடுமண் முத்திரையிலும் பொறித்தனர். இம்மரபு தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் உரிய தனித்துவமான பண்பாகும்.

## சொற்கள் அறிவோம்:

அரசமரபு | ஆள்புலப்போட்டி | ஈமச்சின்னம் | ஈழம் | சான்றுகள் | சுடுமண் அச்சு

தமிழி | நடுவண் அரசு | நாணயங்கள் | நீர்ப்பாசனம் | மூதாதையர் | மேலாண்மை

பெருங்கற்காலக் கல்வெட்டுகளில் தனி ஆள் பெயர்களும், மகன், மகள், மருமகன், சகலன் முதலான உறவுமுறைப் பெயர்களும், இடங்கள் சார்ந்த பெயர்களும், ஆய், வேள் முதலான அரச பட்டங்கள் சார்ந்த பெயர்களும் காணப்படுகின்றன.

ஈழத்தில் சங்க காலத்தின் சமகாலத்திலிருந்து தமிழ் நாணயங்களின் பயன்பாடு இருந்துள்ளது. இவை தமிழக வணிகத் தொடர்பால் ஈழத்திற்கு வந்ததாக இதுவரை காலமும் கூறப்பட்டது. ஆனால், ஈழத்தில் கிடைத்ததை ஒத்த தமிழ் நாணயங்கள் தமிழகத்தில் இதுவரை கிடைக்கவில்லை. இவை ஈழத்தில் வெளியிடப்பட்டவை என்பதை வட ஈழத்தில் கந்தரோடை, பூநகரி மற்றும் தென் ஈழத்தில் அக்குறுகொட ஆகிய இடங்களில் கிடைத்த சுடுமண் நாணய அச்சுகள் உறுதி செய்கின்றன. இவற்றின் மூலம் ஈழத் தமிழரிடையே சங்க காலத்தை ஒத்த அரச மரபு தோன்றியிருந்தமை தெளிவாகின்றது.




இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் தம்மைத் தனியோர் இனமாக அடையாளப்படுத்தி வாழ்ந்ததை வவுனியா, அநுராதபுரம், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழி கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. இச்சான்றுகள் ஈழத்தில் தமிழ்மொழி பேசிய மக்கள் பரந்த அளவில் வாழ்ந்ததையும் அவர்களிடையே தமிழ் அரசமரபு தோன்றியிருந்ததையும் உறுதிசெய்கின்றன. ஈழத்தில் தோன்றிய அரசுகளின் நடுவண் அரசாக அநுராதபுரம் இருந்தது.

## விடை கூறுவோம்:

1. ஈழத்தில் தமிழர்களின் மூதாதையினர் யாவர்?
2. ஈழத்தில் அரச ஆட்சிமுறை உருவாக்கத்திற்கான காலம் எது?
3. அரச ஆட்சி தோன்றுவதற்கான முதன்மைக் காரணங்கள் எவை?
4. வலுவான அரசுகள் எவ்வாறு உருவாகின?
5. தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் உரிய தனித்துவமான பண்பாட்டு மரபாகக் கூறப்படுவது எது?
6. பெருங்கற்காலக் கல்வெட்டுகளில் காணப்படும் உறவுமுறைப் பெயர்களைக் கூறுக.
7. ஈழத்தில் தமிழ் நாணயங்களின் பயன்பாடு எப்போதிலிருந்து இருந்துள்ளது?
8. ஈழத்தில் கிடைக்கப்பெற்ற தமிழ் நாணயங்கள் ஈழத்தில் வெளியிடப்பட்டவை என்பதை உறுதிசெய்யும் சான்றுகள் எவை?
9. தமிழர்கள் மொழியால் தம்மைத் தனி ஓர் இனமாக அடையாளப்படுத்தி வாழ்ந்தமைக்கான சான்றினைக் கூறுக.
10. ஈழத்தில் தோன்றிய அரசுகளின் நடுவண் அரசாக இருந்தது எது?

## பண்பாடு அறிவோம்:

### அ. மூதுரை

**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத**
**ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்**
**நீர்மேல் எழுத்துக்கு நேர்**

- ஔவையார்

**பொருள்:**
நன்றியுள்ள ஒருவருக்குச் செய்த உதவியானது, கல்லில் செதுக்கிய எழுத்துப்போல் நிலையாக இருக்கும். அன்பு இல்லாதவர்க்குச் செய்த உதவியானது, நீரில் எழுதிய எழுத்துப்போல் பயன் இல்லாமல் அப்பொழுதே மறைந்து போகும்.

### ஆ. பழமொழிகள்

- **ஒன்று பட்டால் உண்டு வாழ்வு**
- **ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்**

# தமிழ்

## ஆண்டு 7

### செயல்நூல்

## TAMIL YEAR 7

### WORKBOOK



அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# 7 ஈழத்தமிழர் வரலாறு









செயல் 1

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈழத்தில் தமிழர்களின் மூதாதையினர் யாவர்?

2. ஈழத்தில் அரச ஆட்சிமுறை உருவாக்கத்திற்கான காலம் எது?

3. அரச ஆட்சி தோன்றுவதற்கான முதன்மைக் காரணங்கள் எவை?

4. பெருங்கற்காலக் கல்வெட்டுகளில் காணப்படும் உறவுமுறைப் பெயர்களை எழுதுக.

5. ஈழத்தில் கிடைக்கப்பெற்ற தமிழ் நாணயங்கள் ஈழத்தில் வெளியிடப்பட்டவை என்பதை உறுதிசெய்யும் சான்றுகள் எவை?

6. ஈழத்தில் தோன்றிய அரசுகளின் நடுவண் அரசாக இருந்தது எது?